மகாத்மா காந்தியைக் கொன்றவர்கள் வழிவந்த நீங்கள்

# 100 நாள் வேலைத் திட்டத்தில் காந்தி பெயரை மாற்றுவது ஆச்சரியம் இல்லை!

## “திட்டத்தைச் சீர் குலைக்க வேண்டாம்” — நாடாளுமன்ற மாநிலங்களவையில் — கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் ஆவேச உரை!

**நாமக்கல், டிச. 21 - டெல்லியில் நாடாளுமன்ற மாநிலங்களவையில் குளிர்கால கூட்ட தொடர் நடைபெற்றிருக்கிறது. இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு ஏழை, எளியவரின் வாழ்வை சீர்குலைக்கும் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை குறைக்கும் மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வலியுறுத்தி உள்ளார்.**



இக்கூட்டத்தொடரில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பேசியதாவது,

துணை தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தில் பிரதான இடத்தில் இருந்த மகாத்மா காந்தி சிலையை அகற்றிய நீங்கள் அவரை கொன்றவர் சார்ந்த இயக்கத்தில் வழி வந்த நீங்கள் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் அவரது பெயரை நீக்க முனைந்திருப்பது ஒன்றும் ஆச்சரியமில்லை. தாய் திருநாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட மகாத்மாவின் புகழை இந்த நாட்டின் கடைசி உயிர் இருக்கும் வரை நிலைத்திருக்கும்.

### மசோதா

பேரவை துணை தலைவர் அவர்களே இப்பொழுது நடைமுறையில் உள்ள MGNREGA சட்டப்பூர்வமாக வேலை கோரும் உரிமை கொண்ட திட்டம். ஆனால் புதிய VPGRamjiMasodha மசோதா ஒன்றிய அரசு மாநில அரசுக்கு நிதி ஒதுக்குவது நிபந்தனை ஆக்கப்பட்டுள்ளது. கிராமப்புறத்தில் இருக்கக் கூடிய விவசாய தொழிலாளர்களின் வேலை கோரும் உரிமையை அரசின் சலுகையாக மாற்றப்பட்டுள்ளது.

### 125 நாட்கள்

மேலும் இந்த புதிய மசோதாவில் அறுவடைக் காலம், விதைப்பு காலம் என்று கணக்கிட்டு அந்த நாட்களில் வேலை இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் மக்களவையிலே குறிப்பிடும் போது 125 நாட்கள் வேலை நாட்கள் அதிகரிக்கப்படும் என்று கூறுகிறார். விஞ்ஞானபூர்வமாக கிராமப்புறத்தில் உள்ள ஏழை கூலி விவசாய தொழிலாளர்களை ஏமாற்றுகிறது இந்த அரசு.

விதைப்பு மற்றும் அறுவடை காலத்தை கணக்கிட்டு ஆண்டிற்கு 60 நாட்கள் வேலை இல்லை என்று இந்த சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அனைத்து கிராமங்களிலும் போதிய அளவிற்கு விவசாய பணிகள் நடைபெறுமா? வறட்சி காலத்தில் விவசாய பணிகள் நடைபெறுமா ? அதில் அனைவருக்கும் போதிய அளவு வேலை கிடைக்குமா! என்பதை இந்த அரசு சிந்திக்கவில்லை.

100 நாட்கள் என்பதை 50 நாட்களாக MGNREGA திட்டம் உங்களது கண்களை உறுத்தி கொண்டே இருந்தது. காங்கிரஸ் ஆட்சியில் திராவிட முன்னேற்ற கழகம் கூட்டணியில் அங்கம் வகித்த பொது 2005 ஆம் ஆண்டு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. நீங்கள் பிஜேபி ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து படிப்படியாக வேலை நாட்களை குறைத்தீர்கள். 100 நாட்கள் என்பதை 50 நாட்களாக 60 நாட்களாக குறைக்கப்பட்டது. இபொழுது அமைத்துள்ள முழுமையாக புதிய சட்டம் இத்திட்டத்தை சீர்குலைக்கிறது. ஏழை விவசாய தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்க வேண்டாம். ஒரு உதாரணத்தை நான் சொல்கிறேன் நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு குறிப்பாக நான் சார்ந்த நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு 40 லட்சம் மனித வேலை நாட்களாக இருந்தது. தற்போது அது 20 லட்சம் மனித வேலை நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நிதியை நீங்கள் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து உரிய காலத்தில் வழங்கவில்லை. இப்பொழுது கூட MGNREGA திட்டத்திற்கு தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதி சுமார் ஏறத்தாழ ரூ.1900 கோடி ரூபாய் நிலுவையில் இருக்கிறது.

### 100 சதவிகிதத்தை 60 சதவிகிதமாக குறைப்பு

தற்போது உள்ள 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் 100 சதவிகித நிதி ஒன்றிய அரசு வழங்கும். புதிய மசோதாவில் 60 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. மீதி 40 சதவிகிதம் நிதி சுமையை மாநில அரசின் மீது ஏற்றப்பட்டுள்ளது.

இந்த சட்ட மசோதாவின் பிரிவு 5 உட்பிரிவு 4 மாநிலத்தின் பொருளாதார நிலையை வைத்து ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கிடு செய்யும் என கூறப்பட்டுள்ளது. அப்பொழுது பொருளாதாரத்தில் உயர்ந்த மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படுமா? அங்கு எல்லாம் ஏழை விவசாய தொழிலாளர்கள் இல்லையா?

மேலும் ஒரு மாநிலத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்று ஒன்றிய அரசு தான் முடிவு செய்யும் என்று சொல்லப்படுகிறது.

### கிராம ஊராட்சியின் அதிகாரம் பறிப்பு

இப்பொழுது உள்ள சட்டத்தின் படி ஒரு கிராமத்தில் எவ்வளவு வேலை நாட்கள் வேண்டும் என்பதை கிராம சபை முடிவு செய்யும். ஆனால் இந்த மசோதாவில் கிராமத்திற்கு எவ்வளவு வேலை நாட்கள் வேண்டும் என்பதை ஒன்றிய அரசு கதி சக்தி PORTAL தான் முடிவு செய்யுமாம். இது கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரத்தை பறிக்கிறது.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதால் ஒன்றிய அரசாங்கம் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தினை கைவிடப் பார்க்கிறது. தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு மசோதாவை கைவிட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

“கொலையிற் கொடியாரை வேந்தர்கண் காணின் நிலைகுலைந்து போகும் குடி” என உலக பொதுமறை திருக்குறளில் கூறப்பட்டுள்ளது. ஆட்சியாளர்கள் கொடுமையானவர்களாக (அநியாயம் செய்பவர்களாக) மாறினால், அந்த நாட்டின் மக்கள் வாழ்க்கை அழிந்து சீர்குலைந்து போய்விடும். அதனை உணர்ந்து இந்த மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தமது உரையில் குறிப்பிட்டார்.

---

இன்று நடைபெறுகிறது!

# திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

திருச்சி, டிச. 21-

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் இன்று (21.12.2025 ஞாயிற்றுக் கிழமை) மதியம் 12 மணியளவில் சத்திரம் பேருந்து நிலையம் வி.என். நகர், திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில்” மாவட்ட அவைத்தலைவர் என்.கோவிந்தராஜன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வருகிற 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ள உள்ளோம்.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி சேர்மன்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பணிகள் குறித்து .

19/12/2025 அன்று வெளியிட்ட வரைவு வாக்காளர் பட்டியல் மாதிரியை வைத்து BLA2 அனைத்து வாக்குச்சாவடிகளிலும் பெயர் சேர்த்தல், நீக்கல் சம்பந்தமான தீவிரப் பணிகளை ஈடுபடுத்தல்.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

---



## தி.மு.க. இளைஞர் அணி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

**மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்**

கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 21.12.2025 ஞாயிற்றுகிழமை மாலை 4.00 மணியளவில் மாநில துணைச் செயலாளர்கள் முன்னிலையில் கிரீன்வேஸ் சாலை, குறிஞ்சி இல்லத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் : கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 18.12.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

